**ISSN 2320-4842 (P)**

# குடும்ப விளக்கில் பண்பாட்டு விழுமியங்கள்

**முனைவர் க. சிவக்குமார்**

உதவிப் பேராசிரியர்

தமிழ்த்துறை

பாரதிதாசன் அரசு மகளிர் கல்லூரி [தன்னாட்சி]

புதுச்சேரி - 605 003.

## முன்னுரை

உணர்ச்சியானது சொல், இசை, கட்டுக்கோப்பு பல வகையான அணிகள் சிறக்க வருவது கவிதை எனப்படும். மனத்தின் உயர்ந்த நிலையிலிருந்து இவை தோன்றுவதால் பொருட்களின் ஆழ்ந்த உண்மைகளை அழகுற வெளிப்படுத்தும் பாங்கில் அமையும்.

**பல்வகைத் தாதுவின் உயிர்க்குடல் போறப்பல**
**சோல்லாற் பொருட்கிடனாக உணர்வினின்**
**வல்லோர் அணிபெறச் செய்வனச் செய்யுள்** (நன்னூல்:சொல்.268)

ஏனப் பவணந்தியார்; செய்யுளின் இலக்கணம் பற்றிக் கூறுகிறார்.. உணர்ச்சியும் கற்பனையும் பொருந்திய செய்யுள் எல்லாம் பாட்டுஎன மு.வ. கூறுகிறார். கம்பன் கவிதையை வற்றாத ஜீவநதிக்கு ஒப்பிட்டுக் கவியெனக் கிடந்த கோதாவரி எனக் கூறுகின்றார்.. ஆங்கிலக் கவிஞா; வோர்ட்ஸ்வொர்த் ஆற்றலுள்ள உணர்ச்சிகள் தாமே ததும்பி, வெளிவரும்போது கவிதையாகிறது. பாரதிதாசன், பாரதியின் கவிதா மண்டலத்தைச் சார்ந்தவராதலின், புதியதோர் உலகம் செய்ய கவிதையைக் கருவியாகக் பயன்படுத்தத் தொடங்கினார் கலை மக்களுக்காக எனும் சமுதாய நலநெறியின் வழிவந்த பகுத்தறிவுக் கவிஞர் பாரதிதாசன்.

## இல்லறக் காவியம்

பாரதிதாசனின் குடும்பவிளக்கு தன்னிறைவு கொண்ட நடுத்தர இலட்சியக் குடும்பம் ஒன்றின் வாழ்வுநிலைகளை ஐந்து பகுதிகளில் சித்தரிக்கும் ஒரு புதுமை இல்லறக் காவியம் ஆகும். ஒருநாள் நிகழ்ச்சி விருந்தோம்பல், திருமணம், மக்கட்பேறு, முதியோர் காதல், எனும் பகுதிகளில் பழந்தமிழ் பண்பாடு ,கலை, ஒழுக்கநெறி வாழ்வியல் முறைகளைக் கவிஞர்; நாட்டிற்கு அறிமுகப்படுத்தியுள்ளார். நெறி தவறிய மடமை வாழ்வின் கேடுகளையும் வீட்டியல் வாழ்வின்; சீரழிந்த நிலையினையும் இருண்ட வீடு மூலம் உணர்த்திய கவிஞர் குடும்ப விளக்கில் எழிலும், பொலிவும் நிறைந்த இலட்சிய வாழ்வினை வலியுறுத்துகின்றார்..

## காதல் ஓவியம்

சமுதாய மக்களின் முன்னேற்றத்திற்கு அடிப்படையாக அமைவது குடும்ப வாழ்வாகும். அந்தக் குடும்ப வாழ்வின் தலைவன்-தலைவி சிறப்பில் தான் மக்கள் நலமும் அமைந்துள்ளது. பாரதிதாசன் தலைவன், தலைவியர்; வாழ்வைச் சமூக நன்னெறியில் வள்ளுவ இலக்கியமாகப் படிப்படியாக இளமையிலிருந்து முதுமை வரை வளம் பெற்ற குடும்பமாகச் சித்தரித்துள்ளார். ஒருநாள் நிகழ்ச்சி, விருந்தோம்பல், முதியோர், காதல் ஆகிய மூன்று பகுதிகளிலும் நல்லறத் தலைவன் தலைவியரான மணவழகன்-தங்கம் முக்கியப்பங்கு வகிக்கின்றனர். திருமணம், மக்கட்பேறு பகுதிகளில் வேடப்பன்-நகைமுத்து வாழ்க்கை சிறக்கின்றது. இந்த இரண்டு கதைப் பின்னால் இடம் பெறக் குடும்ப ஓவியம் நயமாகக் சித்தரிக்கப் படுகின்றது.

## மனைவி

குடும்பவிளக்கில், பாரதியின் நன்மனைவி யாம் கவிதைத்தலைவியைச் சந்திக்கலாம். கவிஞரின் பெண்ணுரிமை நெஞ்சம், தங்கத்தை மாசு மருவற்ற தமிழ்த் தலைவி யாகப் படைத்துள்ளது. ஒருநாள் நிகழ்ச்சி யில் தலைவியைப் புதிய சமுதாயத்தின் பிரதிநிதியாகக் காட்டியுள்ளார். தங்கம், பின் தூங்கி முன்னெழுந்து விசையெனப் பணியாற்றும் தமிழர்ப் பரம்பரையில் வந்தவளாதலின் புலருமுன் துயிலெழுந்து காலைக்கடன் முடித்து, இல்முன் கோலமிட்டு, யாழெடுத்துத் தமிழிசை பாடிப் பகலவனை வரவேற்கிறாள். தொடர்ந்து மாடு கறந்து வீட்டை நிறம் புந்து, பாத்திரங்கள் துலக்கி, குளிர் புனல் கொண்டு கொண்டவனைப் பிள்ளைகளைக் குளிப்பாட்டி, உண வாட்டி பம்பரம் போல், பணிவிடை செய்கிறாள். நல்லொழுக்கம், நல்லறமும், நிறைந்த நன்மனைத் தலைவியாதலின் தஙகம் வாழ்வின் ஒவ்வொரு மணித் துளிகளும் தங்கமாக ஆதங்கமின்றித் தங்கி ஒளி பயன் பெற்றமையின் பள்ளிச் சிறார்க்குப் பாடம் புகட்டி, கடைக்குச் சென்று, கணவனுக்குதவி, களிபேரு வகைக் கொள்ளும் மனைவிளக்காகச் சுடர் விடுகினறார்.. தங்கம் நுண்மாண் நுழைபுலமும் தீதிலாதிறமும் கொண்டு, புறநானூறு காட்டும் மனைவிக்கு மடவாளாக அமைந்து இல்லறத்தை நல்லறமாக முன்னின்று நடத்தும் பல்கலைச் செவ்வியாம், தங்கத்தின் ஆற்றலை மணவழகனின் தந்தை,

"அன்றியும் உன் பெண்டாட்டி அறிவுக்கோர் திருவிளக்காம்" (ஒருநாள் நிகழச்சி) எனப் போற்றுகின்றார். பிற்பகுதியில் வரும் நகைமுத்துவின் தொன்நெறிவழாதபண்பும் திறமும் மாண்பும் மணமும்.

"அன்பும் மடனும் சாயலும் இயல்பும்
என்பும் நெகிழ்க்கும் கிளவியும் பிறவும்"

எனும் அகநானூறு காட்டும் தலைவியை நினைவு படுத்துவதோடு இணையற்ற இல்வாழ்வு தலைவியார்க்கு இலக்கணமா கவும் அமைகின்றன.

## கணவன்

இல்லறத்தில் கணவன்-மனைவியார்க்குச் சரிசமப்பங்கும் சுதந்திரமும் உண்டென்று உணர்த்திய பாவேந்தர் குடும்ப விளக்கில் இதை உணர்த்த தவறிவிட்டார். பெண் கல்வி, சமையல், வீட்டறம் இவற்றில் ஆடவர் பங்கு பற்றி முழுமையாகச் சித்தரிக்கவில்லை என்பது புலனாகின் றது. குடும்ப விளக்கில் வாணிபம், திருமணம் பற்றிய பணிகள் தவிர ஏனைய முக்காற் பங்கும் தலைவியால்

ஈடேற்றப் படுகின்றது. ஒற்றமிகு இணையில் ஒருவர் மட்டும் முனைந்தால் வாழ்வில் முழு இன்பமும் பெறமுடியாது என்பதை வலியுறுத்தி,

“தானேதனித்தின்பம் கொள்ளத் தகுமோ? (விருந்தோம்பல்)

எனக் கேட்டும் கவிஞரே நற்பாதியாம் வினை மறவரை அருவினையற்ற பாத்திர மாகப் படைத்தது வியப்பிற்குரியது எனலாம்.

## இளம் காதலர்

காதல் வாழ்விற்குபழமையும் பாரம்பாரியமும் நிறைந்த இலக்கணத்தை வகுத்துக் கொண்டவர் தமிழர் அந்தத் தொன்னெறியை வேடப்பன்- நகைமுத்து காதலில் களவியல் - கற்பியல் நோக்கில் கோடிட்டுக் காட்டுகிறார் கவிஞர்.

**“புதுவாத புதுக்காதல் புதுக்கநோக்கி**

**ஆணினத்தைக் கவர்கின்றாள்! நிலாமுகத்தாள்**

**தனியழகை அணிமுரசும் ஆக்கின் றாளே!”** (விருந்தோம்பல்)

என நினைந்துருகுவதோடு மடந்தையின் நோக்கில் மன மகிழ்ந்து வாழ்வில் எனக்கிவள் கிடைப்பாளோ? என்று ஓங்கவும் செய்கின்றான்.

வேட்கையுற்ற உள்ளங்களின் காதல் விருப்பினைக் கண்ணுற்று, காதல் சுதந்திரம் அளிக்க விரும்பும் கவிஞர் வாணிபப் பணியாக வில்லியனூர் சென்ற வேடப்பனை நகைமுத்துவுடன் சந்திக்க வாய்ப்பளிக்கின்றார்.. தலைவியின் உடல்நலம், உள்ளநலம் நினைந்து புரிப்பில் செல்லும் வேடப்பன் தம் காதல் நிலையைநினைத்து,

**என்நிலைஅறியவில்லை**

**என் பெற்றோர் மங்கைநல்லாள்**

**தன்னிலைஅறியவில்லை**

**தன்மைப் பெற்றோர் ஏனோபெற்றார்?** (திருமணம்)

எனக் குமுறுகிறான். காதலர் சந்திப்பு இயற்கைச் சூழலில் இனிது நடக்கச் செம்புலப் பெயல்நீர் போல அன்புடை நெஞ்சங்கள் கலந்த கலப்பினை,

**தேடக் கிடைத்ததேனே**

**செல்வமென் றருகிற் சென்றான்**

**பழந்தமிழ்ச் சுவடித் தேனைப் பருகுவாள் எதிர் கண்டாள்**

**இழந்ததான் பெருஞ்செல் வத்தை**

**இறந்தேன் நான் பிறந்தேன் என்றாள்!** (திருமணம்)

எனும் பகுதியில் நயமாகச் சித்தரிகின்றார். கவிஞர். இவர்களுடைய காதல் நிலத்தின் பெரிதே வானினும் உயர்ந்தன்று. நீரினும் ஆரளவின்றே எனும் பழந்தமிழர் நெறியின்; தகைமையிலேயே சிறந்தமைகின்றது. காதலர் கற்பியல் வாழ்வுபெருமாள் தாத்தாவின் முயற்சியால் பெற்றோர் சம்மதத்துடன் இனிது நடந்தேற சங்கக் காதல் வாழ்வு படம்பிடிக்கப்பட்டுள்ளது.

## முதியோர் காதலர்

அன்பின்உயிர் நெருக்கத்தையும் பேரின்ப நெறியின் பெருந்தகைமையையும், முதியோர் காதலைக் காட்டுகிறார் கவிஞர். தொல்லியல் வழாத செந்நெறி வாழ்ந்த மணவழகர் – தங்கத் தம்மையின் மெய்யொழுக்கத்துடன் கூடிய முதுமை வாழ்வை மென்மையும் நயமும் சிறக்க தமிழுக்கே புதியமுறையில் காட்ட முனைந்து வெற்றி பெற்றுள்ளார் பாவேந்தர். வாயில் பல்லிழந்து, கண்ணில்

ஒளியிழந்து, சதிராடும் நடையிழந்து உலர்ந்த புற்காட்டாகப் பணையுடல் சருகாகி, வானவிற்போல் வளைந்து சான்ற யாக்கையிலும் சாயா வாழ்க்கை வாழும் முதியோர் நிலை சிறப்புற்ற அன்புடல் அறத்தால் தோய்ந்த ஆயிரம் பிறை மூதாட்டியும், துணைவருமாக, மக்கள், பேரன், பேத்தி கூடிக் கூட்டு வாழ்க்கையில் நெறிபற்றியொழுகும் நிலையைக் காணலாம். முதுமையிலும் அன்பு கொண்டு அறம் போற்றி திறம் போற்றி தீதற ஆய்வு செய்யும் இவர்கள் வாழ்வின் நினைவுகள் கடமையும், கட்டுப்பாடும் கொண்ட ஒரு நல்வாழ் வைச் செப்புகின்றன.

முதியோளேவாழுகின்றாள்

எந்நெஞ்சில் மூன்றுபோதும்

**எதுஎனக் கின்பம் நல்கும் இருக்கின்றாள் என்பதொன்றே!***(முதியோர் காதல்)*

என முதியோர் காதல் பாரதிதாசனால் சிறப்பிக்கப்படுகின்றது.

## குறள் மணம்

குடும்ப விளக்கின் ஐந்து பகுதிகளும் குறள் அதிகாரங்களின் விளக்கமாகவே அமைந்துள்ளன. பாவேந்தரும் குறளோ வியம் குடும்ப விளக்கு என்றே முகவுரை யில் எழுதியுள்ளார் ஐந்து பகுதிகளும், திருவள்ளுவரின் வாழ்க்கைத்துணைநலம். விருந்தோம்பல், இல்வாழ்க்கை, மக்கட் பேறு, அன்புடைமை என்னும் அதிகாரங் களை இலக்கணமாகக் கொண்டெழுந்த இலக்கியமாகவோ சித்தரிக்கப்பட்டுள்ளன. முப்பால்களில் பிற குறள்களின் விளக்கங் களும், பல்வேறிடங்களில் சுட்டிச் செல்லப்படுகின்றன.

ஒருநாள் நிகழ்ச்சியில் தலைவனைப் பேணும் தலைவியின் நிலை, தற்காத்துத் தற்கொண்டான் பேணும் *(குறள்:56)* குறட்கருத்து வடிவில் அமைகின்றது. இல்லறத்திற்குரிய நற்குணங்கள் யாவும் ஒருங்கே பெற்ற தலைவியை ஒழுக்க முடைய *(குறள்:430)* அன்புடைய *(குறள்: 78)* இன்சொல்லினளாக *(குறள்:93)* குறள் நோக்கில் சித்தரிக்கின்ற பாங்கு காணப் படுகின்றது.

## பெண்ணுரிமை

குடும்பவிளக்கு முழுவதும் நிறைந்து ஒலிப்பது பெண்ணுரிமைக்குரலே. கடந்த காலத்தில் சமுதாயத்தில் பெண்களுக்க மைந்த இழிநிலையே கவிஞரின் உள்ளத்தில் இந்நிலைக்கான உந்துதலை அளித்துள்ளது. பெண்ணடிமை தீரும் மட்டும் பேசும் திருநாட்டு மண்ணடிமை தீh;ந்து வருதல் முயற்கொம்பே என்கிறார் பாவேந்தர். தாய்மையினைப் போற்றவேண்டும். பெண்ணுலகு நிலை யினில் உயரவேண்டும் கல்வியில்லாத பெண்கள் களர்நிலம் எனக் கூறிப் பெண் கல்வியை அறிவுறுத்தும் கவிஞர்,

**மகளிரெல்லாம் அரசியலைக் கைப்பற்றி ஆண்டால் மாநிலத்தில் போரில்லை, சாக்காடுமில்லை** என மகளிர்க்காக வாதிடுகின்றார் பாவேந்தர்.

## முடிவுரை

நிகழ்காலத்திலேயே எதிர்காலத்தை உணர்ந்து, உயர்ந்த சமுதாயத்தைக் காண முயல்பவன் கவிஞர் பாரதிதாசனும் உள்ளத்தலையது உயர்வு என்பதற்கேற்ப உயர்ந்த வீட்டில் வாழ்வையே படைத்த ளித்துள்ளார் பழமையான பண்பாட் டைப் பாதுகாத்துதம், புதுமையான மரபை உருவாக்கியும் குடும்ப விளக்கில் ஒரு செந்நெறியைச் சித்தரித்துள்ளார்.